புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

==========================================================

# இயேசு காவியத்தில் இலக்கியத் தாக்கங்கள்

==========================================================

நெறியாளர்
**முனைவர் க.மோகன்காந்தி**
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் மாவட்டம் - 635601

ஆய்வாளர்
**திரு கோ சந்திரசேகர்**
Reg.No. 322PHD23P588TAM
முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்)
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் மாவட்டம் - 635601

**(திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது)**

==========================================================

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தின் மீது கவிஞர் கண்ணதாசனுக்கு அதிக ஈடுபாடு இருந்ததென்பதைத் திரைப்படங்களில் வரும் அவருடைய பாடல்களின் மூலமாகவும், தனிக்கவிதைகளின் மூலமாகவும் அறிய முடிகிறது. 1980 ஆம் ஆண்டில் கண்ணதாசன் புலவர் பட்டம் பெற்றார். ஆயினும் கவிஞர் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களிலும் இலக்கியத் தாக்கம் இருந்தது. கண்ணதாசனின் இயேசு காவியத்திலும் இலக்கியத்தாக்கத்தைக் காண முடிகிறது. இக்காவியம் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டாலும், தமிழ் இலக்கியக்கருத்துகளை ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளதன் வாயிலாக அவரது இலக்கிய ஈடுபாட்டை அறியலாம்.

1. **திருக்குறள் தாக்கம்**
2. **பட்டினத்தார் பாடல்களின் தாக்கம்**

**3. தேவாரத்தின் தாக்கம்**

**4. கொன்றை வேந்தன் பாடல் கருத்து**

**5. ஆத்திச்சூடி தாக்கம்**

**1.திருக்குறள் தாக்கம்**

ஒரு நாள் இயேசு கிறிஸ்து தன் சீடர்களோடு விளைநிலங்களின் வழியாக நடந்து செல்கிறார். வழியிடைப் களைப்பில் சோர்வுற்ற சீடர்கள் விளைநிலங்களின் கதிர்களைச் சுற்றி வந்ததால் மிகுந்த களைப்பு ஏற்பட்டது. வயலிலுள்ள கதிர்களைக் கொய்து உண்டார்கள். இதனைப் பார்த்த பரிசேயர்கள் ஓய்வுநாளில் சீடர்கள் கதிர்களை அறுத்து சாப்பிட்டது முறையா? அறநெறியா? எனக் கேட்டார்கள் பரிசேயர்கள் சீடர்களை எப்போதும் குறைசொல்வதை வாடிக்கையாகக் கொண்டவர்கள், அவர்களுக்கு பதிலளிக்கையில் இயேசு தாவீது வரலாற்றைக் கூறுகிறார். தாவீதும் அவனோடு இருந்தவர்களும் ஆசாரியன் மட்டும் புசிக்கிறதைத் தாங்களும் புசித்ததை அவர்களுக்குக் கூறுகிறார்.

**“மேலான பரிசேயர் குற்றம் காண்பீர்**

**விழியெழுதும் கோல் போல அதனைக் காணேன் ” -** இயேசு காவியம் - ப.86

இக்காட்சியினைக் கவிஞர் தெய்வப்புலவனின் வாயிலாக விளக்குகிறார்.

**“எழுதுங்கால் கோல் காணக் கண்ணேபோல ;**

**கொணர்கன் பழிகானேன் கண்டவிடத்து” -** பரிமேலழகர், குறள் எண் - 285 ப-159

என்ற திருக்குறளின் தொடரினை பயன்படுத்தி உள்ளார்.

மகளிர் மைதீட்டப் பயன்படும், அஞ்சனைக்கோல் கண்ணருகே வந்தாலும், மைதீட்டுல் தலையே கவனிக்கும், மகளிர்தம் கண்கள் அஞ்சனக் கோலை காண்பதில்லை, அதுபோல சீடர்கள் அருகே உள்ளபோதும் எஜமானனாகிய இயேசுகிறிஸ்துவானவர் அவர்கள் செயல் குற்றமாக இல்லை. இதனை விளக்க வள்ளுவர் காட்டும் உவமை பொருத்தமாக கவிஞர் கண்ணதாசன் பயன்படுத்தியுள்ளார்.ஆற்றல்மிகு படைத்தலைவன் ஒருவன், ‘கலிலேயோ என்னும் ஊரில்வாழ்ந்து வந்தான் அவனுடைய பணியாளர் ஒருவர் திமிர்வாதம் எனும்நோயினால் மிகவும் வேதனையடைந்திருந்தான். அப்படைத்தலைவன் இயேசு கிறிஸ்து வருகிறதை அறிந்துகொண்டான் இந்நிகழ்வை, இயேசு காவியத்தில்,

**“வெள்ளத்தில் உயர்கின்ற மலரை போல**

**வினையத்தால் உண்மையினால் நேர்மையாலே**

**உள்ளத்தில் உயர்ந்திருக்கும் மனிதா! -** இயேசு காவியம் ப.112

தன்னுடைய உண்மையாலும், நேர்மையாலும் உயர்ந்திருக்கின்ற இயேசுவே என்று கண்ணதாசன் பாடுகிறார். இதைப் போலவே வள்ளுவரும்,

**"வெள்ளத்தனைய மலர் நீட்டப் மாந்தர்குப்**
**உள்ளந் தனையே துயர்வு" -** பரிமேலழகர் குறள் எண் - 595 ப-330

குளத்தில் உள்ள மலரானது அந்நீரின் அளவே இருக்கும் அது போல ஓர் மாந்தரின் அறிவானது அவர்கற்கின்ற நூலின் அளவே இருக்கும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.காலம் மாறும், கருத்து மாறாது உள்ளத்தின் உயர்வுக்கு மலரை அன்றும் உவமையாக்கி உள்ளார்.இயேசு காவியத்தின் முதலிலும் இறுதியிலும் குறளின் தாக்கத்தை கையாண்டுள்ளார். இயேசுகிறிஸ்து சிலுவையறையுண்டு மரித்து பின்பு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இயேசு பெருமான் சீடர்களுக்கு காட்சியளித்து விண்ணுலகம் சென்றார். இக்காவியத்தை படிப்போருக்கு நன்மைகள் கிடைக்குமென்றும் துன்பங்கள் வராதவாறு இருக்கும். இயேசு கிறிஸ்து மறுபடியும் மண்ணுலகிற்கு வருவார் என்பது சத்தியம். அவர் சொன்ன வாக்கின்படி வருவார், ஏழைகளையும், பாவிகளையும் அவர் இரட்சிக்க வந்தார். இந்த சத்தியத்தினை நம்ப வேண்டும் எல்லாம் அவர்தான்! இயேசுபெருமானே ஆவார்! என்கிறார். இக்காட்சி இயேசு காவியத்தில்,

**"எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே**
**இயேசுவை நம்புவமே!" -** இயேசு காவியம் ப.398

இயேசு பெருமான் எண்ணாகவும், எழுத்தாகவும் இருக்கிறார். எனவே இயேசு பெருமானை நம்ப வேண்டும் என்ற கவிஞரின் கருத்துப்போல வள்ளுவரும்,

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு" -** பரிமேலழகர், குறள் எண் - 392 ப-237

எண்ணும் எழுத்தும் எல்லாம் இயேசுவே என்று மக்கள் நம்புகின்றனர். அதைப்போலவே ஒரு மனிதன் சிறந்தவனாகத் திகழ வேண்டுமெனில் இயேசு கிறிஸ்துவை யூதர்கள் அறைந்து முள்முடி சூட்டி, ஈட்டியில் குத்தி பல கொடுமைகளை செய்து கொண்டிருந்த வேளையில் தன் மகனை காண அன்னைமேரி வருகிறாள். அன்னைமேரி பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தாய் மகனைக்காண

வருவதை விளக்க முற்படும் கவிஞர்,

**"ஈன்றெடுத்த போதினிலே பெரிதுவக்கும் திருமகனை**
**இந்த நேரம் " -** இயேசு காவியம் ப.359

என்று கூறுவது நினைத்தற்குரியது.

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்டதாய் "** - பரிமேலழகர் குறள் எண் - 69 ப-69

ஒரு தாய் தன் மகனைப் பெறுகின்ற போது அடையும் துன்பத்தை விட அவன் சான்றோன் என பிறரால் புகழும்போது அடையும் மகிழ்ச்சி மிகப்பெரியதாகும். இயேசு மக்களைப் பார்த்து அன்பான மொழிகளால் அருளுரையாற்றுகிறார்.அன்பாயிருக்க வேண்டும், மேலும் அறம் செய்ய வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார். அப்பொழுது மக்களே நீங்கள் மற்றவர்கள் மேல் குற்றம் சாட்டக்கூடாது.உங்களில் ஒருவர் தீமை செய்தாலும் நன்மை செய்யுங்கள் நீங்கள் யார் மனத்தையும் புண்படுத்தாபடி நடந்து கொள்ளுங்கள். எந்நேரத்திலும், யாரையும் குறை சொல்லக்கூடாது. நீங்கள் எதை விதைகிறிர்களோ அதையே அறுப்பீர்கள் என்பதை,

**"எவரைபற்றி எந்தநேரத்திலும்**
**குற்றப் பேசிக் குறை – சொல்லாதீர்**
**அப்படி சொன்னால் அடுத்தநாள் உமக்குப்**
**சட்டம் அதுவே தாக்குதல் திரும்பும் "** - இயேசு காவியம் - ப.108

இவ்வடிகள் எந்த ஒருவரை பற்றியும் எக்காரணங்களுக்காகவும் குறைச்சொலலக் கூடாது. ஏனெனில் அது நமக்கே திரும்பவும் வரும் என்ற நம்பிக்கை உள்ளது. இதையே திருவள்ளுவரும்,

**"பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்"** - பரிமேலழகர், குறள் எண் - 319 ப-174

**"தினை விதைத்தவன் தினை அறுப்பான்**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்"** - உலகநாடுகளின் பழமொழிகள் ப-29

என்று பழமொழியும் மக்கள் தற்காலத்திலும் பயன்படும் பழமொழியாக நம்பப்பட்டு வருகின்றது. நாம் ஒருவருக்கு ஒரு தீமை செய்தால் அத்தீமையானது சிறிது காலம் கழித்து நமக்கே அது தீமையாய் முடியும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

2. **பட்டினத்தார் பாடலின் தாக்கம்**

இயேசு பெருமானை போர்ச் சேவகர்கள் சிலுவையிலறைந்து, கொடுமைபடுத்தும் செய்தினை கேள்விப் பட்டு தாயாகிய மரியாள் வருகிறாள்.தலையில் முள் முடியை வைத்து அடித்தும் ஈட்டியால் உடம்பு முழுவதும் புண்களை ஏற்படுத்தியும் போர்ச்சேவகர்கள் பல வழிகளில் துன்பபடுத்தபடுகிறார்கள்.அன்னை மரியாள் தாயின் கடமையிலிருந்து தவறாதவள்,

தோளிலும், மார்பிலும் தூக்கி, மழலை மொழிகளில் கொஞ்சிப் பேசி மகிழ்ந்தவள், இன்று தன் அன்பு மகனின் நிலையையெண்ணிக் கலங்கித்துடிக்கிறாள். இக்காட்சி,

**"தொட்டிலிலும் கட்டிலிலும் தோளிலும் மார்மேலும்**
**சுமந்து நின்று.** - இயேசு காவியம் - ப.358

என்று காவியத்தில் காணப்படுகிறது. சிலுவையில் அறைப்பட்டிருக்கும் இயேசுவாகிய தன் மகனை பார்த்து அன்னைமேரி துன்புறுகிறாள். இந்த நிலையினை பட்டினத்தார் தம் பாடலில்,

**"வட்டிலிலும், தொட்டிலிலும், தோள்மேலுப்**
**கட்டிலிலும் வைத்துன்னைக் காதலித்து – முட்டச்**
**சிறகிலிட்டு காப்பாற்றச் சீராட்டும் தாய்தனக்கோ**
**விறகிலிட்டுச் தீ மூட்டுவேன்"** - பட்டினத்தார் பாட எண்.2 – 144

தன் தாயை எண்ணிப் பாடியுள்ளார்.வைக்கோல் போர்த்தி முன்னனையில் வைத்துத் தன் தோள் அமர்த்தியும், முன்னையில் கிடத்தியும் தாய் தன் மகனை நேசித்து பறவை தன் சிறகினிலே அடைக்காத்து அதற்கு சூடாக இருக்கும்படி செய்தது போலத் தாயும் தன் பிள்ளையை சீராட்டுகிறாள். ஆனால் தன் பிள்ளை இங்கு சிலுவையிலே மரண வேதனையை தாய் உணர்ந்துக்கொண்டு இருக்கிறாள். இப்பாடலில் இயேசுபெருமான் இறந்தபோது அவருடைய அன்னை மேரி கலங்குகிறார். அதைப்போலவே இப்பாடலில் தாயின் சிதைக்கு மகன் தீமுட்டி விட்டு ஆற்றொண்ண துன்பத்தில் உள்ளதைக் காட்டுகிறார். இங்கே மகனின் நிலையைத் தாய் கண்டு துடிக்கிறாள்.

**3.தேவாரத்தின் தாக்கம்**

**"சென்று அந்த நகரினுள் காணுக**
**ஜீவனுள்ள கழுதையும் குட்டியும்"** - இயேசு காவியம் - ப.264

யூதர்களின் பண்டிகை 'பஸ்கா' பண்டிகையின் போது ஈச்சமரத்தின் குருத்தோலை, பெரியவர்களும், சிறியவர்களும் பிடித்துகொண்டு 'ஓசன்னா' யூத ராஜா பவனி வருகிறார் என்று ஆடிப்பாடினார்கள். அப்போது இயேசு கழுதைகுட்டியின் மீது அமர்ந்து பவனி வருகிறார். வலம் வரும்போது குருத்தோலை அவருக்கு முன்பாக தரையிலே வைத்து வரவேற்று மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு காவியத்தில் கவிஞர்,

**"காதலாகிக் கசிந்து கண்ணீர் - மல்கி**
**கைவ ளைத்துக் கொழுந்தினை ஆட்டுவார்"** - இயேசு காவியம் - ப.264

என்று வலியுறுத்துகிறார்.

சம்பந்தரின் தேவாரத்தில் இடம்பெறும் இப்பாடல்,

**“காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி**
**ஓதுவோர்த் தம்மை நன்னெடிக்குய்ப்பது**
**வேத நான்வறும் மெய்பொருளாவது**
**நாதன் நாமப் நமச்சி வாயவே” -** தேவாரம் ப.758
என்ற பாடல் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

**4.கொன்றைவேந்தன் பாடல்**

இயேசு கிறிஸ்து சிறுவயதில் தன் தந்தையோடு எல்லாப் பணிகளையும் சிறப்புறச் செய்கிறார். தாயையும், தந்தையும் மதித்து வணங்குகிறார். இறைநெறியில் நன்கு வலிமை பெற்று பொலிவுடன் வளர்கிறார். சாதி வேறுபாடுகளைக் கடந்து ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமலும் குணத்தில் நடத்தையில் தேவகுமாரன் என்று இவ்வுலகம் அவரை அழைக்க வேண்டும் என்பதை,

**“கிட்டதாயின் வெட்டென மறந்துப்**
**கீழோர் மேலோர் பேதம் இன்றியும்**
**குணத்தில் தேவகு மாரனென் றுலகம்**
**கூப்பி வணங்கக் குறைகள் இலாமலும் ”** - இயேசு காவியம் - ப.37

இவ்வடிகள் தாயையும், தந்தையும் மதித்து போற்றுதலை தேவகுமாரனமாக கிறிஸ்து இருக்கிறார் என்பதை தன் தாயின் நிலை மறந்து – பெரியோர்களுக்கு வேதத்தை போதித்தார் தன் சிறுவயதில் - ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லா உயிரினங்களுக்கு ஒரே சமமாய் அவர்களை அரவனைத்தார்.என்று ஒழுக்க முறைமையால் வளர்ந்து வருகிறார். இக்காட்சி கொன்றை வேந்தனில்,

**“கிட்டாதாயின் வெட்டென மற” -** கொன்றை வேந்தன் பாட-16

என வரும் அடி நினைக்கலாகும். மேற்கண்டவற்றிலிருந்து கவிஞர் இலக்கிய புலமை கொண்டவராக இருந்ததன் காரணமாகவே அவரால் இயேசு காவியத்தின் பல பாடல்களில் இலக்கியத்தின் வரிகளை காட்டி தமது காவிய நடையில் பயன்படுத்தியுள்ளதை இயேசு காவியத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

**5.ஆத்திச்சூடி தாக்கம்**

கவிஞர் கண்ணதாசன் இலக்கிய வடிவில் பாடல்களை வகுத்துள்ளார். அதன் சுவையில் ஆத்திச்சூடியில் அகரவரிசையும் ஒன்று, மனித நேயப் பண்புகளாக அவர் வாழ்க்கையில் இசைந்து வளர்கின்ற முறையை எடுத்துரைக்கிறார்.

**“அடுத்தவர் இடத்தில் அன்பு காட்டியும்**
**ஆடல் பாடல் அணுகா திருந்தும்**
**இழந்தோர் இடத்தே இரக்கம் மிருந்தும்**
**ஈகை உதவி இதயம் மலர்ந்தும்**
**உறவோர் இடத்து உள்ளன்பு வைத்தும்**
**ஊரார் புகழப் பணிவுடன் நடந்தும்**
**என்றும் தந்தை எதைச் சொன்னாலும்**
**ஏற்று முடித்தும் இயல்புற வாழ்ந்தும்**
**ஐயம் தவிர்க்க ஆசானை அணுகியும்**
**ஒத்த வயதே உடையோர் இடத்து**
**ஓதும் பொருளில் உயர்ந்தே நின்றும் ”** - இயேசு காவியம் - ப.37

என்ற வரிகளில் அகரவரிசையை பயன்படுத்தி இலக்கிய புலமையை காட்டியுள்ளார்.இப்பாடலில் அன்பு, இரக்கம், உதவி, உண்மையான அன்பு, புகழ், கீழ்படிதல், செய்தல், அனுகுதல் ஒரே வயது உடையவரிடம் சமமுடன் பழகி மனித நேயத்தை வளர்க்க வேண்டும் என்று பாடியுள்ளார்.

**“அறம் செய விரும்பு**
**ஆறுவது சினம்**
**இயல்வது கரவேல் ”** - ஆத்திச் சூடி பாடல் ப.1-3

என்ற அகரவரிசையில் சான்றாக ஔவையார் ஆத்திசூடியில் சுருக்கிய வண்ணம் கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியத்தில் இயற்றியுள்ளார்.

**‘அகரமுதல எழுத்தெல்லாம் அறியவைத்தாய் தேவி’** - சரஸ்வதி சபதம், திரைப்படம்

என்ற திரைப்படத்திலும்,

**“அகரம் தமிழுக்குச் சிகரம்**
**ஆக்கம் தேவைக்கு ஊக்கம்**
**இரக்கம் கருணைக்கு விளக்கம்**
**ஈகை நல்லவர் யுக்கம் ”** - இரு துருவம், திரைப்படம்

என்ற திரைப்பட பாடல் வரிகளில் அகர வரிசையை இலக்கியத் தாக்கத்தைப்பயன்படுத்தியுள்ளார். தமிழ் மொழிக்கு உயிராய் ‘அ’ என்ற உயிரெழுத்து

சிகரமாய் விளங்குவதாய் மனித நேயப் பண்புகளை ஆக்கம், இரக்கம், ஈகைஎன்பனவற்றை பாடல் வரிகளில் அடியயொற்றி வைத்துள்ளார்.

**முடிவுரை**

வேதாகமத்தை மொழி பெயர்த்தவர் ஓர் அந்தணர் அதனால் வேதாகம மொழிபெயர்பில் வடமொழி சொற்கள் மிகுதி, இன்றளவும் கிறித்துமஸ் சார்ந்த நிகழ்வுகளில் வடமொழிக் கலப்புடன் கூடிய வாசகங்களே மிகுதியாக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட இயேசு காவியம் கண்ணதாசனின் தனித்தன்மையால் இதிலிருந்து மாறுபடுகிறது. ஆண்டாளின் திருப்பாவை போல் தூயத் தமிழ் சொற்களே நூல் முழுவதும் கையாளப்பெற்றுள்ளது.

## துணைநூற்பட்டியல்


| | | |
|---|---|---|
| 1.கவிஞர் கண்ணதாசன் | - | இயேசு காவியம்<br>கலைக்காவிரி,<br>18, பென்வெல்ஸ் ரோடு,<br>திருச்சி – 600 001, 2011 |
| 2.ஓளவையார் | - | கொன்றை வேந்தன்(நீதி நூல்கள்)<br>கற்பகம் புத்தகாலயம்<br>4/2சுந்தரம் தெரு.திநகர்,சென்னை-17 |
| 3.ஔவையார் | - | ஆத்திச்சூடி, (நீதி நூல்கள்)<br>கற்பகம் புத்தகாலயம்<br>4/2சுந்தரம்தெரு.திநகர்,சென்னை-17 |
| 4.ராமசந்திரன்.ர | - | உலகநாடுகளின் பழமொழிகள்<br>பாலாஜி நோட்புக்<br>47த,சுந்தரவேல் தெரு<br>பராசக்தி காலனி,சிவகாசி-626123 |
| 5.திருஞான சம்பந்தர் | - | தேவராம்,<br>உமா பதிப்பகம்.171.பவளக்கார<br>தெரு,மண்ணடி, செனனை-600001<br>முதற்பதிப்பு-அக்டோபர்-2004,2013 |
| 6.பரிமேலழகர் | - | திருக்குறள் பரிமேலகழர் உரை<br>அம்சா பதிப்பகம்,9,மேக்மில்லன் |

காலனி,நங்கைநல்லூர்,சென்னை-61

7.திரைப்படங்கள் - சரஸ்வதி சபதம்-1966 , இருதுருவம்-1971